**கல்நேவ பிரதேச சபையி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்நேவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கல்நேவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா

எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பெறவேண்டிய விளம்பர பலகை கட்டணம் ரூபா.281,000 மற்றும் அட்டுறு தொலைபேசி கோபுர வருமானம் ரூபா.9,000 என்பன கணக்குகளிலிருந்து விடுப்பட்டடிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்புக்கள் மீதான முதலீடுகள் மற்றும் மீளப்பெறல் தொடர்பான தேறிய காசுப்பாச்சல்கள் ரூபா.11,222,882 ஆக காணப்பட்டது இருப்பினும் குறித்த பெறுமதி காசுப்பாச்சல் கூற்றில் ரூபா. 11,931,577 ஆக காட்டப்பட்டுள்ளது. | 2021 இல் நிலையான வைப்புக்கள் மீதான முதலீடுகள் ரூபா. 1,468,463 மற்றும் 2022 இல் நிலையான வைப்புக்கள் மீதான முதலீடுகள் ரூபா.13,400,040 ஆகும். ஆகவே தேறிய காசுப்பாச்சல்கள் ரூபா. 11,222,882 ஆகும். | -மேற்படி- |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட நிலையான சொத்தின் பெறுமதி ரூபா.3,877,998 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்கள் சபைக்கு உரிமை அல்லாததன் காரணத்தினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் நன்கொடையாக பெறப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் வழங்குனர் பெறுமதிகள் ரூபா.20,192,340 காசுப்பாச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையாக காட்டப்பட்டுள்ளது. | நன்கொடையாக பெறப்பட்டவை காசு உட்பாச்சல்களாக கருதப்பட்டுள்ளது. | காசு அசைவற்ற நடவடிக்கைகள் காசுப்பாச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்பட கூடாது. |
| (உ) | மீளாய்வாண்டில் பழுதடைந்த பொருள் ஏல விற்பனை பெறுவனவு ரூபா.21,000 காசுப்பாச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | குறித்த சொத்து அகற்றல் மூலம் எந்தவிதமான காசு உட்பாச்சல்களும் இடம்பெறவில்லை எனினும் இலாப நட்டங்கள் முற்றடங்க வருமானக்கூற்றில் இணக்கம் செய்யப்பட்டுள்ளது. | காசுப்பாச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (ஊ) | சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையான வைப்புக்களின் முதிர்வு திகதியின் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வட்டி ரூபா.707,277 மீளாய்வாண்டின் முற்றடங்க வருமானக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்புகளுக்கான வட்டி முற்றடங்க வருமானக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான வட்டி கணக்கிடப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேரேட்டுக் கணக்கிற்கு அமைவாக திரட்டு நிதியின் 2022 திசெம்பர் 31 இருந்தான மீதி ரூபா.579,419,742 ஆக காணப்பட்டது இருப்பினும், பரீட்சை மீதியின் படி குறித்த மீதி ரூபா.572,736,653 ஆகக் காணப்பட்டது. ஆகவே ரூபா.6,683,089 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்வதாக. | பட்டியல்கள் தொடர்புடைய பதிவேடுகளுடன் இணக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1. சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி 396 (ஈ) | வழங்கப்பட்டு சமர்பிக்கப்படாத ரூபா.12,193 பெறுமதியான 03 காலாவதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா.12,193 பெறுமதியான ஒரு காசேலை மட்டுமே சமர்பிக்கப்படாதுள்ளது | நிதி ஒழுங்கு விதிக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | NCP/LG/DE/04/04/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 28 ஆம் இலக்க வட மத்திய மாகாண உள்ளுராச்சி ஆணையாளரின் கடிதம். | ரூபா.61,450 பெறுமதியான இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் கடன் அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. | ரூபா.391,000 2023 சனவரி இல் பெறப்பட்டுள்ளது நிலுவையாகவுள்ள மிகுதி அறவிடப்படவுள்ளது. | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.6,683,088 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.15,987,213 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | **2022** | | | | **2021** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலங்கள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| **(i)** | வீதவரியும் வரியும் | 1,041,400 | 1,251,800 | 1,134,500 | 993,350 | 1,120,400 | 1,009,950 | 1,146,900 | 876,050 |
| **(ii)** | வாடகை | 5,658,500 | 6,895,250 | 6,586,531 | 5,098,426 | 4,861,550 | 4,617,150 | 9,677,113 | 4,789,767 |
| **(iii)** | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 439,000 | 271,000 | 282,000 | 169,925 | 422,950 | 345,300 | 360,850 | 180,925 |
| **(iv)** | ஏனைய வருமானம் | 14,451,620 | 27,045,936 | 27,121,520 | 13,698,423 | 24,290,689 | 29,477,495 | 32,950,766 | 13,774,007 |
| | **மொத்தம்** | **21,590,520** | **35,463,986=** | **35,124,551** | **19,960,124** | **30,695,589** | **35,449,895** | **44,135,629** | **19,620,749** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ் வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | நிலுவையாகவுள்ள கழிவகற்றல் வரி ரூபா.690,250 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள வரிகளில் ரூபா.133,100 அறவிடப்பட்டுள்ளது மிகுதியாகவுள்ள நிலுவை தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதிவரை நிலுவையாகவுள்ள ஒப்பந்த வாடகை வரி ரூபா.1,468,604 இவற்றுள் ரூபா.306,242 02 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையாக காணப்படுகின்றது. | நிலுவையாக உள்ள வரிகளில் ரூபா.62,663 அறவிடப்பட்டுள்ளது | -மேற்படி- |
| (iii) | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா.1,224,600 பெறுமதியான வர்த்தக உரிமைகளை வாடகைக்கு எடுத்தல் மற்றும் கடை வாடகை நிலுவைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இவ் முறைகேடான குத்தகைதாரர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | 2022 திசெம்பர் 31 நிலவரப்படி குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக ரூபா.2,371,350 அறவிடப்பட வேண்டியுள்ளது இவற்றுள் ரூபா.1,557,100 ஆனவை ஒரு வருடத்திற்கு மேற்பட்டவை. | நிலுவையாக உள்ள வரிகளில் ரூபா.376,850 அறவிடப்பட்டுள்ளது மிகுதியாகவுள்ள நிலுவை தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| **(இ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | மீளாய்வாண்டின் சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற விளம்பர பலகைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை மேலும் நிலுவையாகவுள்ள ரூபா.281,000 அறவிடப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாக. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சபையினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற 04 குடிநீர் செயற்த்திட்டத்தின் ஊடாகவும் விற்பனை செய்யப்பட்ட குடிநீர் மற்றும் புதிய குடிநீர் இணைப்பு வழங்குவது தொடர்பாக நிலுவையாகவுள்ள ரூபா.772,049 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள தொகையில் ரூபா. 1,077,094 அறவிடப்பட்டுள்ளது | -மேற்படி- |
| (iii) | 31 திசெம்பர் 2022 இல் மாகாணசபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.10,874,349 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.554,100 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாக. | நிலுவையை அறவிடுவற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப்பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 அறுவை நிலைய வசதிகள் மற்றும் இறைச்சி விற்பனை மீதான கட்டம் அறவிடப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீகம, கல்நேவ நகர் மற்றும் வெருங்குளம இல் அமைந்துள்ள மூன்று இறைச்சிக் கடைகள் வருடாந்தம் வாடகைக்கு விடப்படுகின்றது இருப்பினும் சபையினால் குறித்த கடைகளுக்குகான அறுவை நிலைய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் அதற்கான காணி ஒன்று பெறப்பட்டு கட்டடம் அமைத்துக் கொடுக்கப்படும். | அறுவை நிலையத்தினை நிர்மானிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |
| (ஆ) | 1988 ஆகஸ்ட் 23 ஆம் திககி பிரசுரிக்கப்பட்ட உப விதி தொடர்பான வர்தமானியன் 32 ஆவது உப விதியின் பிரிவு 09 இன் படி அதிகார எல்லைக்குள் பரிசோதிக்கப்பட்ட ஒவ்வாரு கிலோ இறைச்சிற்கு சபையின் சின்னத்தினை பயன்படுதிதியமைக்காக ரூபா. 10 இனை அதிகரிக்காத கட்டணம் அறவிட்ப்பட வேண்டும். இருப்பினும் அவ்வாறு இடம்பெறிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | பொதுவான உப விதி பின்பற்றப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் நிதி மற்றும் நிர்வாகம் தொடர்பாக 2020 இல உருவாக்கப்பட்டுள்ள 13 மற்றும் 14 ஆம் விதிகளுக்கு அமைவாக 2021 ஆம் ஆண்டின் பொருள் கணக்கெடுப்பு அறிக்கையில் காணப்பட்ட சபைக்குச் சொந்தமான தவறவிடப்பட்ட ரூபா.38,236 பெறுமதியான புத்தகங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | விதிகள் பின்பற்றப்பட வேண்டும். |

**4. பொறுப்புக் கூறல் மற்றும் நல்லாட்சி**

**4.1 சூழல் தொர்பான அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் சேகரிக்கப்படும் கழிவுகள் மீள் சுழற்ச்சி செய்யப்படாது சூழல் பாதிப்படையும் வகையில் குவிக்கப்பட்டுள்ளது. மேலும் கழிவு சேகரிக்கும் நிலையத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட சேதனைப் பசளைகளை விற்பனை செய்வதற்கான எந்தவிதமான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படாது 2022 திசெம்பர் 06 ஆம் திகதியில் உற்பத்தி செய்யப்பட்ட 14,960 கிலோ கிராம் சேதனைப்பசளைகள் களஞ்சிப்படுத்தபபட்டுள்ளது | கழிவுகளை சேகரித்து பிரித்து சேதனை பசளைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. | சேதனைப பசளைகள் உற்பத்திச் செயன்முறை விருத்தி செய்யப்பட வேண்டும். |